மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

அசல் வழக்கு எண்.163/2024

பி.வா.சா. 1 தங்கராஜ்

நாள் 08.10.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தகப்பனார் பெயர் பொன்னு கோனார் என்றால் சரிதான். 1 வது பிரதிவாதி சீனி அம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். வாதியும், 3 வது பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனக்கு சங்கு என்ற சகோதரர் இருந்தார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் தான் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இறந்து போன எனது தகப்பனாருக்கு நானும், எனது தாயாரும், எனது சகோதரியான வாதியும், 3 வது பிரதிவாதியும், சங்கு என்பவரும் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

எனது சகோதரியான வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் தகப்பனார் சொத்தில் அவருக்குரிய பங்கை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் என்னென்ன ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்குரை 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 1337/1பி–ல் கண்ட சொத்து மட்டும் தான் எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். கதவு எண் 3/221 க்கான வீட்டை

எனது தகப்பனார் எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை .

நானும், எனது தம்பியும், எனது தம்பியின் மனைவியும் சேர்ந்து வழக்குரை 1 மற்றும் 2 சொத்துக்களை 8 வது பிரதிவாதி சுப்பையா என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டோம் என்று சொன்னால் சரிதான். அதற்கான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சுப்பையா மற்றும் திருப்பதி ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தில் வழக்குச் சொத்துக்களை எனது தகப்பனார் எங்களுக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எந்த காலகட்டத்திலும் தனது தகப்பனார் வாய்மொழியாக எந்த ஒப்படைவும் செய்யவில்லை என்றும் வழக்கத்திற்காக ஒப்படைவு செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எனது தகப்பனார் வாய்மொழியாக சொத்துக்களை ஒப்படைவு செய்து இருந்தால் சுப்பையா மற்றும் திருப்பதி ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுக்க பத்திரத்தில் அது குறித்து நான் சொல்லியிருப்பேன் என்றும், நான் சொல்வது போல எனது தகப்பனார் வாய்மொழியாக சொத்துக்களை ஒப்படைவு செய்யாததால் அது பற்றி நான் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சுப்பையா மற்றும் திருப்பதிக்கு எழுதிக் கொடுத்த திரைய ஆவணங்கள் குறித்து வாதிக்கு தெரியாது என்றும், வாதிக்கு தெரியாமல் தான் ஆவணங்கள் எழுதிக் கொடுத்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

பதில் அறிவிப்பு கொடுப்பதற்கு முன்னர் வழக்குச் சொத்துக்களை பொறுத்து சுப்பையா மற்றும் திருப்பதிக்கு கிரைய ஆவணங்கள் எழுதிக் கொடுத்த விவரம் தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தாக காட்டப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு எனது பெயரிலும் அல்லது எனது தம்பி பெயரிலும் அல்லது எனது தம்பியின் வாரிசுகள் பெயரிலும் பட்டா எதுவும் ஏற்பட்டு அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி அல்ல. வழக்குரை 1வது சொத்தை தவிர மற்ற சொத்துக்களுக்கு நாளது தேதி வரை பட்டா எனது தகப்பனார் பெயரில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான்.

நான் சொல்வது போல எனது தகப்பனார் எனக்கு சொத்துக்களை பாகம் செய்து கொடுத்திருந்தால் அந்த காலகட்டத்திலேயே சொத்து இருக்கான வருவாய்த்துறை ஆவணங்களை எனது பெயரில் நான் மாற்றி இருப்பேன் என்றும் அவ்வாறு எதுவும் கொடுக்காததால் தான் வருவாய்த்துறை ஆவணங்களை எனது பெயரில் மாற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் வாங்கிய கடன் தொகையை நான் செலுத்தியதாக சொல்லி உள்ள நிலையில் எனது தகப்பனார் கடன் வாங்கியதை காண்பிக்கவும் அதை நான் திருப்பி செலுத்தியதை காண்பிக்கவும் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த காலகட்டத்திலும் கடன் தொகை எதுவும் வாங்கவில்லை என்றும், வழக்கிற்காக கடன் தொகை வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதியின் கணவரின் சகோதரருக்கும் எனது மகனுக்கும் இடையே வழக்கு நடைபெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது சொத்து சம்பந்தமான வழக்கு இல்லை என்று சொன்னால்

சரிதான். அந்த வழக்கிற்க்கும் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கையின் வாரிசுகள் திருவில்லிபுத்தூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 105/2007 தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட சொத்துக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா. 4 மற்றும் 8 ஆவணம் 2019 – 2023 காலகட்டத்திற்கான தீர்வை ரசீதுகளை சமர்ப்பித்துயுள்ளேன் என்று சொன்னால் சரியில்ல.

20 வருடங்களாக வழக்குச் சொத்துக்களை அனுபவம் செய்து வருவதை காண்பிக்க ஆவணங்கள் எதையும் நான் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கொடுத்த அனுமதியின் பெயரில்தான் நானும் எனது சகோதரரும் வழக்கு வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றும், பாகப்பிரிவினை அடிப்படையில் குடியிருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எனது தகப்பனார் காலம் சென்ற பின்பு நாளது தேதி வரை எவ்வித பாகப்பிரிவினையும் செய்யப்படாமல் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தில் வாதியின் உரிமையை மறைத்து சுப்பையா மற்றும் திருப்பதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

4 வது வழக்கு சொத்தில் என்னுடைய சொந்த பணத்தில் நான் வீடு கட்ட வில்லை என்றும், கூட்டு குடும்பம் சம்பாத்தியத்தில் வீடு கட்டினேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4, 6 முதல் 8 வரையிலான ஆவணங்கள் வழக்குச் சொத்தில் எனக்கு எவ்வித தனி உரிமையையும் கொடுக்காது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்குரிய

5 ல் 1 பங்கு பிரித்து கொடுக்க வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல.

8 வது பிரதிவாதி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர் இல்லை. பி.வா.சா.1 குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு